இலங்கை புகையிரத திணைக்களம்

# செயல் திறன் அறிக்கை – 2024

ரயில்வே தலைமையகம்
கொழும்பு 10

## உள்ளடக்கம்


**01. அத்தியாயம் - தாபன பகுதி / செயற்பாட்டு சாரம்சம்**

1.1 அறிமுகம் 01
1.2 தாபனத்தின் கூற்று, இலட்சியம், நோக்கு 02
1.3 பிரதான விடயங்கள் 03
1.4 அமைப்பு அட்டவணை 04
1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான உப திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள, பாதை வலையமைப்பு 06
1.6 இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள்/நிதியங்கள் 07
1.7 வெளிநாட்டு கடன் உதவி கிடைக்கும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் 07

**02 அத்தியாயம் - முன்னேற்றமும் முன் நோக்கும்**

விஷேட வெற்றிகள், சவால்கள் மற்றும் முன் நோக்கும். 8-19

**03. அத்தியாயம் - வருடத்தின் மொத்த நிதி முன்னேற்றங்கள்**

3.1 நிதி செயல் திறன் கூற்று 20
3.2 நிதி நிலைமைக் கூற்று 22
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 23
3.4 நிதி கூற்று குறிப்புக்கள் 24
3.5 வருமான சேகரிப்பு செயல் திறன் 25
3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்துதலின் செயல்திறன் 25
3.7 நி.பி 208ன் படி, வேறு அமைச்சுக்களின்/திணைக்களங்களின் பிரதிநிதி எனும் ரீதியில் இத் திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு/ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 25
3.8 நிதி அல்லாத சொத்துக்கள் பற்றி அறிக்கையிடும் செயல் திறன் 26
3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 26

**04. அத்தியாயம் - செயல் திறன் காட்டி**

4.1 நிறுவனத்தின் செயல் திறன் காட்டி (செயற்பாட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டு) 26

**05. அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கத்தை (ஞபுனு) அடைந்து கொள்ளும் செயல் திறன்**

5.1 கண்டறியப்பட்ட நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கினை குறிப்பிடுக 27
5.2 நிலையான அபிவிருத்தி இலக்கை வெற்றிக் கொள்ளல் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்க 28

**6. அத்தியாயம் - மனித வள பகுதி**

6.1 படையணியினரின் முகாமைத்துவம். 28
6.2 நிறுவனத்தின் செயல் திறனில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மேலதிகம் தாக்கத்தினை ஏற்படுத்தும் விதம் 28
6.3 மனித வள அபிவிருத்தி 29

**7. பிரிவு - அனுகூல அறிக்கை** 34

01 அத்தியாயம்

## 1.1 அறிமுகம்

இலங்கை போக்குவரத்தின் முன்னோடியான இலட்சியத்தை மேற் கொள்ளும் இலங்கை புகையிரத திணைக்களம் 1864 திசம்பர் 26ம் திகதி தனது முதலாவது வெள்ளோட்டத்தை ஆரம்பித்ததுடன் தனது இலட்சியப் போக்கை 159 வருட காலமாக வழங்கி வருகின்றது.

பிரதான போக்குவரத்து வழங்குநராக இலங்கை புகையிரத சேவை 2024 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்திற்காக பங்களிப்பை வழங்கிக் கொண்டு தனது சேவை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றது. 2024ம் வருடத்தில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் தொடர்ச்சியாக செயற்பட்டு சூழல் பற்றுள்ளதும் சிக்கனமானதுமான போக்குவரத்து வழி முறையாக தமது சேவை நடவடிக்கைகளை வினைத் திறனுடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இலங்கை புகையிரத திணைக்களமானது அரசாங்கத்தின் பிரதான திணைக்களமாக போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இத் திணைக்களம் புகையிரத கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுவதுடன் புகையிரத பொது முகாமையாளர் புகையிரத திணைக்களத்தின் பிரதானியாக செயற்படுகின்றார். இலங்கை புகையிரத திணைக்களத்தில் கிளைகள் மற்றும் 14 அலகுகளின் கீழ் நிருவாக நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்புடைய உப திணைக்களத்தின் கிளை, அலகின் பிரதானியினால் அவ்அவ் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டின் 25 மாவட்டங்களில் 21 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பாதை கி.மீ 1475.74 அளவுள்ள துாரத்தை புகையிரத நிலையங்கள் 418 உடன் பயணிகளுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குகின்றது. தனது முக்கிய குறிக்கோளான பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பாதுகாப்பானதும், விசுவாசமுடையதுமான குறித்த நேரத்திற்கு பயணிக்கும் சிக்கனமானதும் , வினை திறன் மிக்கதுமான புகையிரத போக்குவரத்து சேவையை வழங்குதலும் சூழல் பற்றுள்ளதும் சிக்கனதுமான வினைத் திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு தனது பாரிய அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றது. 2024ம் வருடத்திலும் பல்வேறு தடைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் தனது சேவையை தொடர்ச்சியாக கொண்டு செல்லவதற்கு முடிந்துள்ளது.

பயணிகளுக்காக வேண்டி வினைத்திறன் மிக்கதும் வசதியுடையதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. அதற்கமைய சீனா மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன புகையிரதங்கள் துாரப் பயண சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் புதிய புகையிரதங்களை அறிமுகப்படுத்தல் மூலம் பொதுப் பயணிகளின் போக்குவரத்து தேவையை வழங்குவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் திடமாக செயற்பட்டு செயலாற்றியது.

## நோக்கு

இலங்கையில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் மிகவும் விசுவாசமுள்ள போக்குவரத்து வழங்குநராக திகழ்தல்.

## இலட்சியம்

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக பாதுகாப்பானதும், விசுவாசமுள்ளதும் வினைத்திறன் மிக்கதுமான புகையிரத சேவையை வழங்குதல்.

நோக்கம்

- தொலைதொடர்பு மற்றும் பிரவேசப்பத்திர அமைப்பினை மேம்படுத்தல் போன்ற நவீன முயற்சிகளின் ஊடாக பிரதானமான இயக்க தடைகளை விளித்தவாறு பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு காலத்திற்கேற்ப மற்றும் விசுவாசமான சேவையை உறுதிப்படுத்துதல் தொடர்பில் புகையிரத இயக்கங்களில் வினைத்திறனை மேம்படுத்தல்.

- பயணிகள் மற்றும் ஆளனியினரை பாதுகாத்தல் தொடர்பில் புகையிரத இயக்கங்களின் போது உயர்ந்த பாதுகாப்பான நியமங்களை நிறுவுதல் மற்றும் நடாத்திச் செல்லல் , அதன் மூலம் அபாயங்களை குறைத்தல்

- உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயமாக்குதல் மற்றும் புகையிரத இயக்கங்களில் சிறந்த பயன்பாட்டினை பின்பற்றி பயணிகளின் வசதி மற்றும் திருப்தியை மேம்படுத்துவது தொடர்பில் சிறந்த நிலையில் புகையிரத போக்குவரத்து சேவையினை வழங்குதல்

- நாட்டின் பல்வேறுப்பட்ட பிரதேசங்களின் ஊடாக புகையிரத போக்குவரத்திற்கு சாதாரணமான அணுகல் முறையினை விருத்தி செய்வதோடு குறைந்த இலாபகரமான பாதைகளில் அத்தியவசியமான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்தல்

- பாவனையாளர்கள் தொடர்பில் மொத்த நடமாட்டத்தினை மேம்படுத்துகின்ற தடைகளின்றிய போக்குவரத்து வலையமைப்பினை நிர்மாணிப்பதற்காக புகையிரத சேவை மற்றும் ஏனைய போக்குவரத்து முறைககளை இணைத்தல்

- மேம்படுத்தப்பட்ட இயக்கத்தின் வினைத்திறன், இயலுகின்ற எச்சந்தர்ப்பத்திலும் கட்டணங்களை ஒப்பிடல், மற்றும் பொருட் போக்குவரத்து போன்ற புதிய வியாபார சந்தர்ப்பங்களை ஆய்வு செய்தலின் ஊடாக வருமானத்தினை அதிகரிக்கலாம்.

1.3 பிரதான விடயங்கள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை செயற்படுத்தல்
- பொருட்கள் போக்குவரத்தை மேற் கொள்ளல்.
- விஷேட பயணிகள் புகையிரத சேவையை நடைமுறைப்படுத்தல்.

## 1.4 திணைக்கள அமைப்பு



Level 1 **G.M.R** –General Manager railway

Level 2 **AGM(A)** – Addl. General Manager(Admin) , **AGM(M)** - Addl. General Manager(Mechanical), **A.G.M. (M)** - Addl. General Manager(Infrastructure), **A.G.M. (O)**- Addl. General Manager(Operation), **C.F.O** – Chief Finance officer

Level 3 **DGM**-Deputy General Manager (Admin) , **DGM(T**) - Deputy General Manager (Training & HR) , **CEM** – Chief Engineer (Motive Power), **CME**- Chief Mechanical Engineer, **CE(W)** Chief Engineer ( Way & works), **CSTE-** Chief Engineer ( Signal & Telecommunication), , **DGM(C**) - Deputy General Manager (Commercial) , **DGMT**- Deputy General Manager (Transport) , **CIA**- Chief Internal Auditor , **CA**- Chief Accountant , SRP- Superintendent(RP) ,
**DGMP** - Deputy General Manager (Procurement) , **D P** – Director (Planning)

Level 4 **D(A)**-Director (Admin) , **DCET** - Deputy Chief Engineer (Training & HRB), **DEMO** - Deputy Chief Engineer (Motive Power), **DEM**- Deputy Chief Engineer (Mechanical), **DEME** - Deputy Chief Engineer (Electrical) , **DEW** - Deputy Chief Engineer (Way & Works) , **DEBR** - Deputy Chief Engineer (Way & Bridges), **DEBU** - Deputy Chief Engineer (Property Development &Building) , **DES** - Deputy Chief Engineer ( Signal & Telecommunication), **SC** – Superintendent Commercial , **ST** – Superintendent Transportation

Level 5 **SEM** – SuperintendentEngineer(Motive Power),**SEME**- SuperintendentEngineer(Mechanical),**SEW** - SuperintendentEngineer( Way & works), **SS** – Surveyor Superintendent,**SES** - SuperintendentEngineer( Signal & Telecommunication), **SEP** -SuperintendentEngineer (Planning Project) , **DSSM** – DeputySuperintendent (Sales & Marketing) ,**DIT** - DeputyDirector (Information Technology) , **DSRP** - DeputySuperintendent (R.P) , **SP** – Superintendent (Procurement)

Level 6 **ADA** – Assistant Director (Admin) / Deputy Director (Admin),**LGO** – Legal Officer , **ET** – Engineer (Training & HRB) , **EM** – Engineer (Motive Power),**ATM** – Asst. Transportation Superintendent (Mechanical) ,**ATE** -Asst. Transportation Superintendent ( Energy Conservation) ,**EM** – Engineer (Mechanical), **EE**– Engineer (Electrical) ,**CM** – Chemist & Methodologist ,**EW** – Engineer (Way & Works) , **S** – Surveyor ,**ES** – Engineer (Signaling & Telecommunication),**EP** – Engineer (Planning & Project) , **AC** – Asst. Director / Deputy Director (Cost) ,**AST**– Asst. Superintendent (Transportation / Commercial), **AC** – Accountant , **ADI** – Asst. Director (Information Technology) ,**ASRP**-Asst. Superintendent

## 1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களங்கள், பிரிவுகள் , மற்றும் அலகுகள் அமையப் பெற்றுள்ள விதம்.

அட்டவணை இல 01

**உப திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள்**

| # | உப திணைக்களங்கள்/ அலகு | திணைக்களம்/உப திணைக்களங்கள்/அலகுகளின் பிரதானிகள் |
|---|---|---|
| 01 | புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம் | புகையிரத பொது முகாமையாளர் |
| 02 | பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களம் | பிரதான பொறியியலாளர் (இயந்திரம்) |
| 03 | பிரதான பொறியியலாளர் (பாதை/வேலைத்தளம்) உப திணைக்களம் | பிரதான பொறியியலாளர் (பாதை/வேலைத்தளம்) |
| 04 | பிரதான பொறியியலாளர் (இயக்க வலு) உப திணைக்களம் | பிரதான பொறியியலாளர் (இயக்க வலு) |
| 05 | பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) உப திணைக்களம் | பிரதான பொறியியலாளர் (சமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு) |
| 06 | பிரதான கணக்காளர் உப திணைக்களம் | பிரதான நிதி உத்தியோகத்தர் |
| 07 | வாணிப உப திணைக்களம் | பிரதி முகாமையாளர் (வாணிபம்) |
| 08 | புகையிரத களஞ்சிய உப திணைக்களம் | பிரதி முகாமையாளர் (பெறுகை) |
| 09 | போக்குவரத்து உப திணைக்களம் | பிரதி முகாமையாளர் (இயக்கம்) |
| 10 | இலங்கை புகையிரத பாதுகாப்பு சேவை | பாதுகாப்பு அதிகாரி |
| 11 | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் | பிரதி முகாமையாளர் (பயிற்சி மற்றும் மனித வளம்) |
| 12 | பிரதான ஆகுசெலவு உத்தியோகத்தர் காரியாலயம் | பிரதான ஆகு செலவு உத்தியோகத்தர் |
| 13 | திட்டமிடல் பகுதி | பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 14 | தரவுகள் ஒருங்கிணைப்பு அலகு | முகாமையாளர் தரவுகள் ஒருங்கிணைப்பு |

அட்டவணை இல 02

**புகையிரத பாதை கட்டமைப்பு**

| பாதை | தூரம் கி.மீ | புகையிரத நிலைய எண்ணிக்கை | உப புகையிரத நிலைய எண்ணிக்கை | புகையிரத தரிப்பிடம் |
|---|---|---|---|---|
| | | | | |
| பிரதான பாதை ( கொழும்பு கோட்டை - பதுளை வரை) | 292.38 | 46 | 33 | 21 |
| மாத்தளை பாதை ( பேராதெனிய - மாத்தளை வரை) | 33.6 | 08 | 14 | 04 |
| புத்தளம் பாதை (ராகம - புத்தளம் வரை) | 119.57 | 18 | 25 | 0 |
| வடக்கு பாதை(பொல்கஹவலையிலிருந்து காங்கேசன்துறை வரை) | 339.47 | 32 | 26 | 20 |
| தலை மன்னார் பாதை (மதவச்சி தொடக்கம் தலை மன்னார் வரை ) | 106.05 | 08 | 04 | 0 |
| மட்டக்களப்பு பாதை (மாஹோ தொடக்கம் மட்டக்களப்பு வரை) | 211.11 | 1 | 17 | 05 |
| திருகோணமலை பாதை (கல்ஓயா சந்தி – திருகோணமலை) | 70.23 | 05 | 03 | 01 |
| கடலோர பாதை (கொழும்பு கோட்டை தொடக்கம் பெலியத்த வரை) | 183.28 | 41 | 34 | 0 |
| களனிவெளி பாதை (மருதானை தொடக்கம் அவிஸ்ஸாவெல வரை) | 59.37 | 31 | 17 | 08 |
| புத்தளம் அருவக்காடு பாதை | 37.00 | 1 | | - |
| துறைமுக பாதை | 7.00 | 1 | - | - |
| கொலன்னாவ பாதை | 3.18 | 1 | - | - |
| மிஹிந்தளை பாதை | 13.50 | 01 | 0 | 2 |
| **மொத்தம்** | **1,475.74** | **191** | **173** | **61** |

### 1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள்/நிதியங்கள்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் வேறு நிறுவனங்களோ நிதியங்களோ இல்லை

### 1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்கள்

அட்டவணை இல 03

| # | கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு அ.டொ. ரூபா.மி | தற்போதைய முன்னேற்றம் 2023.12.31 திகதியவாறான |
|---|---|---|---|
| 01 | மாஹோவிலிருந்து ஓமந்தை வரையில் புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம் | 91.26 | நடைமுறையில் உள்ளது. மொத்த கருத்திட்டத்தில் 96% நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 02 | புகையிரத வினைத்திறனை மேம்படுத்தல் தொடர்பான கருத்திட்டம் | போக்குவரத்து அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்திட்டமாகும் | இங்கு உப கருத்திட்டங்களாக பல கருத்திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன |

# 02ம் அத்தியாயம்

## முன்னேற்றமும் முன்நோக்கும் …….

### பொதுவான முன்னேற்றம்

இலங்கை புகையிர சேவை (SLR) இலங்கையின் பிரதான போக்குவரத்து வழங்குநராக 2024 ஆம் ஆண்டிலும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு உச்சளவிலும் தொடர்ச்சியாகவும் பங்களிப்பை வழங்கியுள்ள. பல்வேறு சவால்கள் மற்றும் எதிர்பாரா நிலைமைகளுக்கு மத்தியிலும் 2024 ஆம் ஆண்டில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

2024 ஆம் ஆண்டின் மொத்த வருமானமானது ரூபா 16,468.34 மில்லியன் வரை கடந்த வருடத்தினை பார்க்கவும் ரூபா 388.87 மில்லியனால் அதிகரித்துள்ளது. முழு வருமானத்துடன் சம்பந்தப்பட்ட சகல வருமான விடயங்களிலும் 2024 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தை காணக் கூடியதாக இருந்தது. பயணிகள் வருமானம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 13,748.66 மில்லியனாக காணப்பட்டதுடன் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 509.49 மில்லியனால் அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் மீண்டுவரும் செலவினமும், மூலதன செலினத்தையும் உள்ளடக்கிய முழுச் செலவு ரூபா 39,508.60 மில்லியனாக காணப்பட்டதுடன் அது 2023ம் ஆண்டில் ரூபா 39,739.89 மில்லியனாக காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா மில்லியன் 27,964.45 ஆகும். 2023 ஆம் ஆண்டில் அது ரூபா 27,842.05 மில்லியன் ஆகும். எரிபொருள் செலவு அதிகரித்தமையே மீண்டுவரும் செலவினம் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாகும். மூலதன செலவினம் 2024ம் ஆண்டில் ரூபா 11,544.15 மில்லியனாகவும், மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 11,897.82 மில்லியனாகவும் காணப்பட்டது. அபிவிருத்தி கருத்திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் வெளிநாட்டு நிதிகள் செலுத்தப்பட்டமை குறைவடைந்தமையுமே மூலதன செலவுகள் குறைந்தமைக்கான காரணங்களாகும்.

200 பயண பெட்டிகளை புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடர் செயற்பாடாக மேலும் 100 பெட்டிகளை புனரமைப்பு செய்யும் கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டது. தந்திரி நிறுவனத்தினால் 100 பெட்டிகளை புனரமைத்தல் போன்ற நடவடிக்கைகள் புகையிரத அபிவிருத்திக்காக 2024 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்களாகும்.

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளின் பயனாற்றலை மேலும் மேம்படுத்துவதற்காக மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதை புனரமைப்பு நடவடிக்கையை செயற்படுத்தல், பாதை வலையமைப்பில் சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு அமைப்பில் மற்றும் புகையிரத படையின் அனைத்து பராமரிப்புமற்றும் மேம்படுத்தல்கள் என்பன ஒதுக்கப்பட்ட வரலு செலவு திட்ட ஒதுக்கீட்டினுள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

மேலும் புத்தளம் புகையிரத பாதையில் நீர் கொழும்பு மற்றும் கொச்சிக்கடைக்கிடையிலான புகையிரத இரட்டை பாதையின் முதற் கட்டமானது செயற்படுத்தப்பட்டு வருவதுடன் கண்டி – பேராதெனிய – கடுகண்ணாவை புகையிரத பாதையில் வேலைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை புகையிரத திணைக்களத்தில் நிலவும் சவால்களை வெற்றி கொண்டு நிலைபேறான அபிவிருத்தி கோட்பாட்டின் படி செயற்படுவதற்காக வேண்டி சகல முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன. இவ் இலக்கை அடைவதற்காக உச்சளவு முயற்சியுடன் சரியா நோக்கின் கீழ் புகையிரத திணைக்களம் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. விஷேடமாக இந்திய கடன் உதவியின் கீழ் மற்றும் சீன கடன் உதவியின் கீழ் இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அதி சொகுசு புகையிரதங்கள் பயணிகளின் தேவைக்காக போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அதே

போன்று சுற்றுலா பயணிகளை கருத்திற் கொண்டு விஷேட புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்தல் சுற்றுலாத்துறைக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் பயணிகள் அற்ற வருமான வழிகளின் முன்னேற்றத்திற்காக விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் பல திட்டமிடப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் புகையிரத பயணிகள் 101.58 மில்லியன் பயணித்துள்ளதுடன் பயணிகள் கிலோ மீற்றர் 5,999.57 மில்லியன் துாரம் போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது. அதே போன்று பொருட்கள் டொன் 2.11 மில்லியன் அளவு ஏற்றியிறக்கப்பட்டு பொருட்கள் டொன் 172.37 வான துாரம் போக்குவரத்து செய்து இலங்கை புகையிரத சேவை தனது தொடர்ச்சியான பங்களிப்பை பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ளது.

**நிதி முன்னேற்றம்**

2024 ஆம் ஆண்டில் இலங்கை புகையிரத திணைக்களம் ஈட்டிய வருமானம் மற்றும், செலவு சம்பந்தமான தகவல்கள் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவனை இல 04 **வருமானம் 2023 - 2024**

| # | வருமான வகை | வருமானம் (ரூபா. மில்) 2023 | வருமானம் (ரூபா. மில்) 2024 |
|---|---|---|---|
| | | | |
| 01 | பயணிகள் | 13,239.17 | 13,748.66 |
| 02 | போதிகள் மற்றும் தபால் | 392.06 | 331.42 |
| 03 | பொருட்கள் மற்றும் கால்நடைகள் | 1,761.63 | 1447.57 |
| 04 | காணிகளை குத்தகைக்கு வழங்குதல் | | 646.03 |
| 05 | வேறு | 686.60 | 294.65 |
| **மொத்தம்** | | **16,079.47** | **16,468.34** |

அட்டவனை இல 05 **செலவு பிரிவு 2023-2024**

| செலவு வகை | 2023 (ரூபா.மி) | 2024 (ரூபா.மி) |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 27,842.05 | 27,964.45 |
| மூலதனச் செலவு | 11,897.83 | 11,544.15 |
| மொத்தம் | 39,739.89 | 39,508.60 |

பஸ் கட்டணத்துடன் ஒப்பிடுகையில் புகையிரத கட்டணங்கள் குறைக்கப்பட்டமையால் புகையிரதத்தில் பயணிக்கும் பயணிகளின் பிரவேசப் பத்திரங்கள் எண்ணிக்கை அதிகரித்தமையை போன்றே புகையிரதத்தில் போக்குவரத’து செய்யப்படுகின்ற பொருட்களின் அளவு அதிகரித்தமை மற்றும் ஒதுக்கீடுகளின் குத்தகை பணம் சேகரிக்கப்பட்டமை காரணமாக புகையிரத வருமானத்தில் 2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் அதிகரிப்பொன்றினை காட்டியது. 2023 ஆம் ஆண்டினுள் மொத்த வருமானம் ரூபா 16,079.47 மில்லியனாக காணப்பட்டதுடன் அது 2024 ஆம் ஆண்டில் ரூபா 16,468.34 மில்லியனாகும். அதன் படி மொத்த வருமானத்தில் 2% வீதமான அதிகரிப்பை காட்டுகிறது.

2024 ஆம் ஆண்டில் மொத்த செலவு ரூபா 39,508.60 மில்லியன் ஆவதுடன், இதனுள் ரூபா 27,964.45 மில்லியனாக மீண்டுவரும் செலவினமும் ரூபா 11,544.15 மில்லியனான மூலதன செலவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வாணிப நடவடிக்கை**

குறித்த காலவெல்லைக்குள் புகையிரத வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாணிப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. புதிய லொகோ(LOCO) என்ஜின்களை இயக்கம் தொடர்பில் ஈடுபடுத்தி புகையிரத பொருட் போக்குவரத்தினை அதிகரித்தல்
2. செயலற்றிருந்த 5000 காணி குத்தகைக்கான ஒப்பந்தங்களை மீண்டும் செயற்படுத்துவதற்கு செயற்பாடுகளை ஆரம்பித்தல், காணி குத்தகை வருமானங்களை சேகரிப்பினை முறையாகச் செய்தல் (CPC(Ceylon Petroleum Corporation) மற்றும் CPSTL(Ceylon Prtoleum Storage terminals limited) மூலம் காணி குத்தகைப் பண நிலுவைகளை சேகரித்தல்
3. வைஸ்ரோய் , சீதாவக்கை ஒடீசி புகையிரதம் போன்ற விசேட புகையிரதங்களை ஆரம்பித்தல், விசேட சுற்றுலா புகையிரத பெட்டிகளை ஒதுக்கீடு செய்துகொள்ளல் மற்றும் விசேட கட்டணத்தின் மூலம் 300 புகையிரத நிலையங்களின் நிலத்தினை வாடகைக்கு வழங்கல் , உயர்ந்த வணிக நிலையத்தில் புகையிரத காணிகளை வாடகைக்கு வழங்கல், வியாபார ப்ரெண்ட் தொடர்பில் புகையிரத உள்ளேயும் வெளியேயும் வாடகைக்கு வழங்குதல்
5. இலங்கை முழுவதும் அமைந்துள்ள புகையிரத களஞ்சியங்கள்,உணவகங்கள்,வாகன தரிப்பிடங்கள் மற்றும் வவியாபார கட்டிடங்களை குத்தகைக்கு கொடுத்தல்
6 .சூரிய ஒளிச்சகதி தோற்றுவித்தல் தொடர்பில் புகையிரத கட்டிடங்களின் கூரைகள் தனியார் பிரிவிற்கு வாடகைக்கு கொடுத்தல் தொடர்பிலான தேவையான ஆரம்ப றடவடிக்கைகள் ( அனுமதியை பெறல், மற்றும் அதற்கு தேவையான நடவடிக்கைகள மேற்கொள்ளல்.
7. அனுமதிச் சீட்டின்றி பயணிக்கும் பயணிகள் தொடர்பில் சுற்றிவளைத்தல் தடவைகளை அதிகரித்து தண்டப் பணத்தினை அறவிடுதல் போன்ற வேறு வழிகள் மூலம் வருமானத்தை அதிகரித்தல்.

2024 **ஆம் ஆண்டில் ஈட்டப்பட்டவை கீழே காட்டப்பட்டுள்ளன** அட்டவனை இல 06

| ஆண்டு வருமானம் - 2024 | | |
|---|---|---|
| **தொடரிலக்கம்** | **விடயம்** | **மொத்த வருமானம் (ரு)** |
| 01 | புகையிரத நிலைய பயணிகள் வருமானம் | 12,232,200,468.17 |
| 02 | புகையிரத நிலைய பருவசீட்டு வருமானம் | 1,516,464,237.81 |
| 03 | விசேட புகையிரதங்களை ஒதுக்கீடு செய்தல் | 61,891,837.92 |
| 04 | புகையிரத பெட்டிகளை ஒதுக்கீடு செய்தல் | 16,937,676.00 |
| 05 | பயணிகள் தண்டப் பணம் | 18,165,810.00 |
| 06 | வைஸ்ரோய் விசேட புகையிரதம் | 30,845.957.97 |
| 07 | நிறுவப்பட்ட ATM இயந்திரத்திற்கான குத்தகை | 24,422,786.44 |
| 08 | புகையிரத ஒதுக்க காணிகள் மற்றும் தற்காலிகமாக அனுமதியளித்தல் | 1,387,735.52 |
| 09 | புகைப்படம் எடுத்தல் மற்றும் திரைப்படமாக்கப்படல்களுக்கான அனுமதியை வழங்கல் | 15,160,048.40 |

| | | |
|---|---|---|
| 10 | ஓய்வறைகள் | 24,449,768.00 |
| 11 | நடமாடும் உணவகங்கள் | 17,283,952.08 |
| 12 | கடைகள் | 20,208,673.46 |
| 13 | வாகன தரிப்பிடங்கள் | 29,907,070.00 |
| 14 | கொழும்பு கெதர தங்குமிட கட்டிடத்தில் மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள வாகன தரிப்பிடம் | 9,292,500.00 |
| 15 | பாற் விற்பனை கூடங்கள் | - |
| 16 | தபால் போக்குவரத்து | 84,913,974.76 |
| 17 | சிறு விற்பனை | 35,637,595.54 |
| 18 | சுத்திகரிப்பு கட்டிடங்கள் | 717,198.00 |
| 19 | ஆடைகளை சீர்செய்துக்கொள்ளும் அறைக்கான கட்டணம் | 1,776,150.00 |
| 20 | மலசலகூட நுழைவுக்கட்டணம் | 2,130,780.00 |
| 21 | வியாபார பற்றுச்சீட்டுக்களின் கீழ் பொருட் போக்குவரத்து | 264,797,782.00 |
| **மொத்த வருமானம்** | | **14,408,592,002,07** |

அட்டவனை இல 07

| **ஆண்டு வருமானம்** | | **2024** |
|---|---|---|
| | **விடயம்** | **மொத்த வருமானம்(ரூ)** |
| 01 | வியாபர விளம்பரங்கள் | 39,830,776.62 |
| 02 | புகையிரத நிலைய உணவகங்கள் 26 | 84,538,485.12 |
| 03 | பொருட் களஞ்சியங்கள் (கொழும்பு)21 | 71,397,964.80 |
| 04 | பொருட் களஞ்சியங்கள் (கொழும்பிற்கு வெளியே)55 | 24,944,763.44 |
| | மொத்த வருமானம் | 220,711,989.98 |

காணிப் பிரிவின் மூலம் ஈட்டப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டின் மொத்த வருமானம் கீழ்வருமாறு அட்டவனை இல 08

| **தொடர் இலக்கம்** | **விடயம்** | **வருமானம்** |
|---|---|---|
| 01 | காணிகளை குத்தகைக்கு வழங்கல் | 188,034,482.39 |
| 02 | குறுக்கு பாதைகளை இடுவதற்காக காணிகளை குத்தகைக் வழங்கல் | 1,895,272.75 |
| | **மொத்த வருமானம்** | **189,929,755.14** |

பெற்றோலியம், திரிபோசா, சியேம்சிட்டி மற்றும் ஒவ்வொவ்வொரு உப திணைக்களங்களினால்(உதா- கடவைகளுக்கு ஏற்படும் சேதங்கள், பழைய சில்பர்களை விற்றல், பழைய தண்டவாளங்களை விற்றல் , ஏனைய பயன்படுத்தப்படாத பொருட்களை விற்றல் போன்றவை)மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானங்கள் மற்றும் வணிக அத்தியட்சகர் காரியாலயத்திற்கு அறிக்கையிடப்படாத வேறு வருமான கிடைப்பனவுகள் புகையிரத கணக்காளரிற்கு அறிக்கையிடப்படும்.

## உட்கட்டமைம்பு வசதிகளின் அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டில் புகையிரத பாதை,கட்டிடங்கள், பாலம் மற்றும் சமிக்கை கட்டமைப்பு போன்ற பிரிவுகளில் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதான அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- கண்டி ,பேராதெனிய மற்றும் கடுகன்னாவ புகையிரத பாதைகளும் அதனோடு சம்பந்தான செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.
- உடரட்ட புகையிரத பாதை தொடர்பில் 10,000 கொன்கிறீட் சில்பர்கள் மற்றும் செக்ரோல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- களனிவெலி புகையிரத பாதையில் புதுப்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்
- நீர்கொழும்பு தொடக்கம் கொச்சிக்கடை வரையான இரட்டை பாதை நிர்மாணித்தலுக்கான ஆரம்ப கட்ட வேலைகளை மேற்கொண்டு செல்லல்.
- புதிய புகையிரத நிலைய கட்டிடங்களை நிர்மாணித்தல், பாலங்களை பராமரித்தல், மற்றும் புகையிரத நிலையங்களின் மலசலகூட வசதிகளை மேம்படுத்தல் போன்றவற்றை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.
- மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் 96% முடிவடைந்துள்ளன
- கெட்டம்பே தொடக்கம் சரசவி உயன வரை இரட்டை புகையிரத பாதை நடவடிக்கைகளை செயற்படுத்துதல்
- கடலோர புகையிரத பாதை தொடர்பில் துரு பிடிக்காத 4,000 தண்டவாளங்கள் மற்றும் 10,000 புதிய புகையிரத தண்டவாளங்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கணேவத்தை புகையிரத நிலையத்தில் பக்க இணைப்பு பாதைக்கு தேவையான புகையிரத மேடையினை தயாரிப்பது தொடர்பில் ஆரம்ப கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## புகையிரத தொடரணி

வினைத்திறன் மிக்க பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தினை வழங்குவதற்காக இலங்கை புகையிரத சேவையின் புகையிரத தொடரணியை தொடர்ச்சியாக பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்புகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

12 என்ஜின்களில் பாரிய பழுதுபார்ப்புக்கள் மற்றும் 304 சிறு பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. பயணிகள் பெட்டிகளில் 76 பாரிய பழுதுபார்ப்புக்கள் மற்றும் 78 சிறு பழுதுபார்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. வெகன்களில் 54 பாரிய பழுதுபார்ப்புக்கள் மற்றும் 525 சிறு பழுதுபாரப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. 02 பாதுகாவலர் பெட்டிகள் புனரமைக்கப்பட்டதுடன் 10 பாதுகாவலர் பெட்டிகளின் 45% புனரமைப்பானது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசின் கீழ் வழங்கப்பட்ட 20 புகையிரத என்ஜின்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தன்த்ரி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற 200 பயணிகள் பெட்டிகளை புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடர்ச்சியாக மேலும் 100 பயணிகள் பெட்டிகளின் புனரமைப்பு செய்தலின் கீழ் 92 பெட்டிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு இயக்கத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் இரத்மலானை புகையிரத வேலைத்தளத்தினுள் வலுவேக தொகுதிகளை பழுதுபார்க்கும் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தியிருந்த புகையிரத தொடரணி தொடர்பாக விபரங்கள் கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல 09 **புகையிரத தொடரணி**

| இலக்கம் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புகையிரத என்ஜின்கள் (இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள) | 117 |
| 02 | வலுவேக தொகுதிகள் (இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள) | 130 |
| 03 | பயணிகள் பெட்டிகள் | 1,475 |
| 04 | பெட்டிகள் | 816 |

**பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து**

2024ம் வருடத்தில் 101.58 மில்லியன் பயணிகள் புகையிரதத்தில் பயணித்துள்ளதுடன் 2023 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது அது 6% வீத குறைவினை காட்டுகின்றது. அவ்வாறாயினும் பயணிகளினூடான வருமானமானது இவ்வருடத்தினுள்அதிகரித்துள்ளது. இருப்பினும் 2024 ஆம் ஆண்டில் பயணித்த மக்களின் எண்ணிக்கை குறைவடைதல் தொடர்பில் மஹவ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான பகுதியில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டமை தாக்கத்தினை செலுத்தியது.

அட்டவணை இல.10 பயணித்த பயணிகள் தொகையும் பயணிகள் வருமானமும்

| வருடம் | பயணித்த பயணிகள் தொகை (மி) | பயணிகள் வருமானம் ரூபா.மி | பயணிகள் கி.மீ (மி) |
|---|---|---|---|
| 2023 | 109.15 | 13,239.17 | 7,043.98 |
| 2024 | 101.58 | 14,122.99 | 5,999.57 |

இவ்வருடத்திற்குள் 02 புதிய புகையிரத போக்குவரத்து தடவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

1.கொழும்பு கோட்டையிலிருந்து திருகோணமலை வரை- (இல 7077/7078)-(நாளொன்றுக்கு 02 தடவைகள்)

**பயணிகளின் வசதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள்**

- 2023 ஆம் ஆண்டில் சுற்றுலா வியாபார முன்னேற்றம் தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த கெலிப்சோ புகையிரதம் 2024 ஆம் ஆண்டில் இயக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட்டு சுற்றுலா துறை முன்னேற்றத்துக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது
- இலங்கை வங்கியின் முலம் ஹோமாகமை - களுத்துறை தெற்கு ஆகிய புகையிரத நிலையங்களில் ATM இயந்திரங்களை பொருத்துதல்
- தன்த்ரி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட 100 பயணிகள் பெட்டிகளின் புனரமைப்பினை நிறைவு செய்தவாறு இருத்தல்
- சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக கொழும்பு கோட்டையிலிருந்த பதுளை வரை கெலிப்சோ புகையிரதத்தினை அறிமுகப்படுத்தல்
- நிகழ்நிலை முறைமையின் கீழ் நுழைவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை வழங்கல் (பிரவேச.lk)

**பொருட்கள் வருமானமும் ஏற்றியிறக்கப்பட்ட பொருட்களின் அளவும்**

அட்டவணை இல 11

| வருடம் | பொருட்கள் வருமானம் ரூ.(மி) | பொருட்கள் அளவு டொன். (மி) | டொன் கி.மீ அளவு (மி) |
|---|---|---|---|
| 2023 | 1,761.63 | 1.99 | 159.46 |
| 2024 | 1,786.16 | 2.11 | 172.37 |

❖ 2024ம் வருடத்தில் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கை தொடர்பில் கருதும் போது பொருட்களின் தொன்களின் அளவு 6% வீதம் அதிகரித்துள்ளதோடு டொன் கிலோ மீட்டர் அளவு 8% வீதத்தால் அதிகரித்துள்ளது.

**இயக்க காட்டி**

**அட்டவணை இல 12**

| இல | செயல் திறன் காட்டி | 2023 | 2024 |
|---|---|---|---|
| 01 | பயணித்த பயணிகள் தொகை (மில்லியன்) | 109.15 | 101.58 |
| 02 | பயணிகள் கி.மீ அளவு ( மில்லியன்) | 7,043.98 | 5,999.57 |
| 03 | ஏற்றியிறக்கப்பட்ட பொருட்கள் டொன் (மில்லியன்) | 1.99 | 2.11 |
| 04 | பொருட்கள் டொன் கி.மீ (மில்லியன்) | 159.46 | 172.37 |
| 05 | புகையிரத கிலோ மீற்றர் தொகை | 10.30 | 10.77 |

## 2.8 முழு புகையிரத போக்குவரத்து

அட்டவணை 13

**புகையிரத பயண தடவைகள்**

| புகையிரத சேவை | திட்டமிடப்பட்ட புகையிரத தொகை | போக்குவரத்தில் ஈடுபட்ட புகையிரத தொகை |
|---|---|---|
| புற நகர் | 58,267 | 55,613 |
| பிரதேச | 25,543 | 24,689 |
| தூர மற்றும் நகர் சேவை | 18,882 | 18,725 |
| ரேல் பஸ் | 6,515 | 6,321 |
| **i பயணிகள்** | **109,207** | **105,366** |
| **ii பொருட்கள்** | **15,829** | **14,375** |
| மொத்தம் | **125,036** | **119,741** |

மேற் கூறப்பட்ட அட்டவணை இல 13ல் குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி 2024 ஆம் ஆண்டினுள் போக்குவரத்திற்காக திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரத தொகை **109,207** ஆவதுடன் அதில் **105,366** போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டன. பயணிகள் புகையிரதங்களுள் 53% வீதம் புறநகர் புகையிரத சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

**நிரந்தர பாதை கட்டமைப்பும் கட்டிடங்களும்**

நிரந்தர பாதைகள் கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக 246,478 மீற்றர் தண்டவாளங்களும், 65,863 கொங்கிரீட் சில்பர்களும் 38,926 மரக்குற்றி சில்பர்களும், 20,277 ப்ளஸ்ட் கியூப்களும் பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை இல 14

**புகையிரத பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்**

| பயன்படுத்தப்பட்ட பொருட்கள | அளவு |
|---|---|
| தண்டவாளம் (மீற்றர்) | 246,478 |
| மர குற்றி சில்பர் | 38,926 |
| உருக்கு சில்பர் | 1,135 |
| கொங்கிரீட் சில்பர் | 65,863 |
| ப்ளஸ்ட் கியூப் | 20,277 |

**சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு**

சமிக்கை கட்டமைப்பின் தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் போன்றவை வினைத்திறன் மிக்க புகையிரத சேவையை மேற்கொள்வதற்கு முக்கியமான சாதகங்களாகும். 2024 ஆம் ஆண்டிலும் சமிக்கை கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்களை தொடர்ச்சியாக மேற் கொண்டு கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் செயற்படுத்தப்பட்டன.

- கணேவத்தை மற்றும் நாகொல்லாகமை வரை நிலவும் பழைய இயந்திர அமைப்பிற்காக புதிய Block சமிக்ஞை அமைப்பினை நிர்மாணித்தல்
- *கம்பஹா புகையிரத நிலையத்தில் புதிய பக்க இணைப்பு பாதை தொடர்பில் புதிய சமிக்ஞை அமைப்பினை நிறுவுதல்*
- *கம்பளை புகையிரத நிலையத்தில் முகாரியில் இயந்திர சமிக்ஞை அமைப்பினை புதுப்பித்தல்*
- *வேயங்கொடை புகையிரத நிலையத்தில் கீழ் பாதையில் உள்ளெடுப்பதற்கான காலத்தினை குறைப்பதற்கான சமிக்ஞையினை புதுப்பித்தல்*
- *பூ ஓய புதிய சமிக்ஞை அமைப்பொன்றினை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வருதல்*
- *கண்டி மற்றும் பேராதெனிய புகையிரத நிலையங்களுக்கிடையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இரட்டை பாதைக்கு ஏற்புடைய சமிக்ஞை அமைப்பின் நிர்மாண பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*
- *கல்கமுவ புகையிரத நிலையத்தில் தற்காலிகமான புகையிரத நிலையங்களுக்கிடையில் சமிக்ஞை அமைப்பினை நிறுவுதல்*
- *மஹவ தொடக்கம் அம்பன்பொல வரையான சமிக்ஞை அமைப்பு மற்றும் புகையிரத குறுக்கு பாதை அமைப்பினை நிறுவுதல்*

- **இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவனம்**

சிறந்த தொழிநுட்பவியலாளர்களை தோற்றுவிக்கும் நோக்கில் நடாத்தப்பட்டு வருகின்ற ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவனம் தனது கடப்பாடுகளை 2024 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. பயிற்சிப் பெறும் மாணவர்களின் செயன்முறை பரீட்சைகளை நடாத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல், தொழில்சார் பரீட்சைக்கான வசதிகளை வழங்கல், இயந்திரவியல் தொழிநுட்ப நிறுவனத்தில் பயிலும் பயிலுநர்களை மதிப்பீடு செய்தல், பல்கலைகழக மாணவர்களின் வேலைத்தள பயிற்சி மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் இதனூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தினால் கொண்டு நடாத்திச் செல்லப்படும் பாடநெறிகள் பிரதானமாக கீழ்வருமாறு செயற்படுத்தப்படும். தேசிய தொழில்சார் தகைமைகள் National Vocational Quaification தரங்கள் உள்ளடங்கிய முழுநேர பாடநெறிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

2024 ஆம் ஆண்டினுள் வெளி நிறுவனங்களுக்காக ஜேர்மன் தொழிநுட்பவியல் பயிற்சி பெற்றவர்களின் தகவல்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல 15

2024 ஆம் ஆண்டில் தொழிநுட்பவியல் பயிற்சி வழங்கல்

| # | நிறுவனம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொழிற்சாலை இலக்கம் 1(டீசல் என்ஜின்வியலாளர்கள்) | 30 |
| 2 | தொழிற்சாலை இலக்கம் 2 (இயந்திரவியலாளர்கள்) | 12 |
| 3 | தொழிற்சாலை இலக்கம் 3 மின்னியியலாளர்கள்) | 29 |
| 4 | தொழிற்சாலை இலக்கம் 4 பொருத்துனர்கள்) | 26 |

இரத்மலானை இலங்கை ஜேர்மன் புகையிரத தொழிநுட்ப பயிற்சி நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. திணைக்கள பரீட்சைகளை நடாத்துவது தொடர்பில் வசதிகளை வழங்கல்
2. OSRP கருத்திட்டத்தின் கீழ் ADB உதவிகளால் நிறுவனத்திற்கு Trade Simulator அலகொன்றினை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்
3. பயிலுநர்களின் உதவியோடு விளைநிலங்களை நடாத்திச் செல்லல்
4. இரத்மலானை புகையிரத தொழிற்சாலைகளை காண வரும் குழுக்களுக்கு வழிகாட்டியாக செயற்படல்
5. வேறு உப திணைக்களங்கள் தொடர்பில் உற்பத்தி மற்றும் உபகரணங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**புகையிரத பாதுகாப்பு சேவை**

புகையிரத பாதுகாப்பு சேவையானது அவர்களது சேவையினை முழு புகையிரதத்தினையும் தழுவி மேற்கொள்கின்றது.

1. இயக்க விடயம்
2. நிவாரண கடமைகள்
3. புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத தத்தினை பாதுகாத்தல் மற்றும் அதற்கு பாதுகாப்பினை வழங்கல்
4. புகையிரத பாதுகாப்பு கடமைகள்
5. நிதி பாதுகாப்பு கடமைகள்
6. சீறைப்பிடித்தல் மற்றும் தண்டப்பணம் அறவிடுதல்
7. பாதுகாப்பு கடமைகள்
8. அனுமதியற்ற நிர்மாணிப்புக்களை அறிக்கையிடல்
9. புகையிரத இசை வாத்தியக் குழு
10. திடீர் சுற்றிவளைத்தல் கடமைகள்

2024 ஆம் ஆண்டில் புகையிரத பாதுகாப்பு சேவையினால் அடையப் பெற்ற முன்னேற்றங்கள் கீழே அட்டவணை இல 24 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது

அட்டவணை இல 16

| செயற்படுத்தப்பட்ட விடயங்கள் | 2024 | |
|---|---|---|
| | அளவு | தண்டப் பணம் (ரூ) |
| நுழைவுச்சீட்டு இல்லாமை | 1107 | 3,382,836.00 |
| மேல் வகுப்புகளில் பயணஞ் செய்தல் | 337 | 1,058,952.00 |
| நட்டங்களையும் சேதங்களையும் அறவிடல் | 58 | 1,783,582.20 |
| நீதிமன்ற தண்டனைப் பணம் | 12 | 71,500.00 |
| அதிக பளு | 78 | 26,158.00 |
| மொத்த வருமானம் | | 6,323,028.20 |

**சவால்களும் குளறுபாடுகளும்**

1. நிலவும் என்ஜின்களில் 72% சதவீதம் 40 வருடங்கள் பழமையான என்ஜின்களாக காணப்படுதல்
2. பாரிய பாதை தொகுதியானது பழைய சமிக்ஞை அமைப்பின் மூலம் மேவுகை செய்யப்படுவதோடு அதன் காரணமாக சமிக்ஞை பிரச்சினைகள் மென்மேலும் அதிகரித்தமை
3. வேலைப்பளு உள்ள நேரங்களில் காணப்படும் பாதை அமைப்புக்கள் போதாமை
4. பயிற்சிப்பெற்ற ஊழியர்களுடைய பிரச்சினைகள்
5. பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் குறைபாடுகள்
6. சகல புகையிரத பாதைகளிலும் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் தொகை அதிகரித்துக் காணப்படல்.
7. பிரவேசப் பத்திரமின்றி பயணித்தலை கட்டுப்படுத்தலில் உள்ள சிக்கல்கள்.
8. என்ஜின்களின் கையிருப்பின்மை.
9. தொழில்நுட்ப பிரிவுகளில் நிலவிய அதிக வெற்றிடம். நாளாந்த சேவையை மேற் கொள்ளும் போது சகல பிரிவுகளிலும் நிலவும் சேவையாளர்களின் பற்றாக்குறை காரணமாக குறித்த விடயங்களின் போது குளறுபாடான விடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.
10. மீண்டுவரும் செலவினம் விஷேடமாக மேலதிக உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்தல்
11. பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் நீண்ட காலம் எடுத்தல்

**புகையிரத சேவையின் தரத்தையும் விசுவாச தன்மையையும் மேம்படுத்துவதற்காக 2023ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்டதும் எதிர் காலத்தில் மேற் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள விடயங்களும்.**

- இந்தியா மற்றும் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய புகையிரதங்கள் பயணிகளின் பயன்பாட்டுக்காகவும் . பொருட்கள் போக்குவரத்திற்காகவும் ஈடுபடுத்தப்படல்.
- உள்நாட்டிலேயே பயணிகள் பெட்டிகளை புனரமைப்புச் செய்தல்.
- மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- களனிவெளி புகையிரத பாதையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.
- 100 புதிய பெட்டிகளை புனரமைப்பு செய்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- ஆசிய அபிபவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் கொழும்பு புற நகர் புகையிரத சேவையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

கொழும்பு புற நகர் புகையிரத சேவையை மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயணிகளை கவரக் கூடியதுமான வகையில் உருமாற்றும் நோக்கில் பிரதான, களனிவெளி, கரையோர மற்றும் புத்தளம் போன்ற புகையிரத பாதைகளை உள்ளடக்கும் வகையில் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் இக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். புறநகர் பிரதேசங்களின் புகையிரத பாதை கட்டமைப்பையும் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்புகளையும் புகையிரத நிலையங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற கருத்திட்டங்கள் பல இக் கருத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் கீழ்க் குறிப்பிடப்படும் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆரம்ப திட்டமிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாஹோவிலிருந்து அனுராதபுர வரையில் சமிக்கை கட்டமைப்பை நிறுவுதல்.
- வலுவேக தொகுதிகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இரத்மலானையில் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுதல்
- புகையிரத சுற்றுலா கருத்திட்டத்தினை ஆரம்பித்தல்
- பொல்கஹவலையிலிருந்து குருநாகல் வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
- குருநாகலிருந்து மாஹோ வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
- பயாகல தெற்கிலிருந்து அலுத்கமை வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்
- இந்திய கடன் உதவியின் கீழ் இரத்மலானை மற்றும் தெமட்டகொடையில் புகையிரத இயக்கத்தளம் மற்றும் புகையிரத முகாரிகளை அமைத்தல்.
- மிகிந்தலை புகையிரத நிலையத்தில் அருகில் பொருட் போக்குவரத்து நிலையமொன்றை நிறுவுததல்

## முன்நோக்கு

பாதை நெரிசலற்ற போக்குவரத்திற்கு பொருத்தமான போக்குவரத்து வழிமுறையை தேரந்தெடுப்பதே நடைமுறை அரசாங்கத்தின் போக்குவரத்து கொள்கையின் பிரதானமான குறிக்கோளாகும். அதன் படி பாதைகளில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக இயலுமான வரை புகையிரதத்தின் மூலம் மேற் கொள்வது பிரதான அபிலாஷையாகும். அரசின் கொள்கையின் அடிப்படையில் புகையிரத உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது தேவையை கண்டறிந்து அவற்றை செயற்படுத்துவதன் மூலம் பயணிகளுக்காக மிகவும் வினைத்திறன் மிக்க சிக்கனமான புகையிரத சேவையை வழங்குவது புகையிரத திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். அதன் படி புகையிரத திணைக்களத்தின் முன் திட்டமிடல்களில் இந் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் மிகவும் கவர்ச்சிகரமான சூழல் பற்றுள்ள போக்குவரத்து வழி முறையாக புகையிரத சேவையில் கீழ்க் குறிப்பிடப்படும் சாதகமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

- வினைத்திறன் *மிக்*கதும் சுகபோகமுள்ளதுமான புகையிரத சேவையை மேற் கொள்ளல்.
- புகையிரத சேவையை நவீனமயப்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளையும் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலையும் அறிமுகப்படுத்தி புகையிரத பிரவேசப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஆசன முன் பதிவுக்காக நிகழ்நிலை முறை மூலம் (Online) மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

- பொருட்கள் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான புகையிரத என்ஜின்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் புகையிரத தட்டுகளை உள்நாட்டிலேயே அமைத்தல் கொழும்பு, அம்பாந்தோட்ட, திருகோணமலை,காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களில் புகையிரதங்கள் மூலம் பொருட்கள் ஏற்றியிறக்கலை மேற்கொள்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ளல்.

## 03 அத்தியாயம்

**2024 திசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான இறுதி நிதி செயல் திறன் வெளிப்பாடு**

### 3.1 நிதி செயல் திறன் வெளிப்பாடு
**ஏசீஏ-எப்**

**2024 திசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் காலத்திற்கான நிதி செயல் திறன் வெளிப்பாடு**

| வரவு செலவு ( நிகழ் வருடம்) | | குறிப்பு | உண்மையான | | |
|---|---|---|---|---|---|
| | | | நிகழ் வருடம 2024(ரூ) | கடந்த வருடம 2023(ரூ) | |
| - | **கிடைத்த வருமானம்** | | | | |
| - | வருமான வரி | 1 | | | |
| - | உள்ளூர் பொருட்கள் சேவைகள் வரி | 2 | | | ஏசீஏ1 |
| - | சர்வதேச வியாபார வரி | 3 | | | |
| 15,900,000,000 | வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனையவை | 4 | 16,468,344,008 | 16,079,474,196 | |
| **15,900,000,000** | **கிடைத்த முழு வருமானம் (அ)** | | **16,468,344,008** | **16,079,474,196** | |
| | | | | | |
| | **வருமானமற்ற பெறுகை** | | | | |
| 11,494,924,000 | திறைசேரி கட்டுநிதி | | 13,065,399,000 | 9,143,536,000 | ஏசீஏ 3 |
| | வைப்பு | | 1,596,526,838 | 1,808,648,336 | ஏசீஏ 4 |
| 2,950,000,000 | முற்பண கணக்கு | | 2,796,425,118 | 2,732,243,319 | ஏசீஏ |
| | வேறு வருமானம் | | 64,749,799 | | |
| **14,444,924,000** | முழு வருமானம் அற்ற பெறுகை (ஆ) | | **17,523,100,756** | **13,684,427,655** | |
| **30,344,924,000** | முழு வருமானம் பெறுகை மற்றும் வருமானமற்ற பெறுகை இ = (அ)+(ஆ) | | **33,991,444,764** | **29,763,901,851** | |
| | திறைசேரிக்கு செலுத்தியது (இ) | | **1,051,678,939** | **300,002,531** | |
| **30,344,924,000** | தேறிய வருமான பெறுகை மற்றும் வருமானமற்றவை. | | **32,939,765,825** | **29,463,899,320** | |

